தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### செடி முருங்கை சாகுபடிக்கு ரூ. 25 ஆயிரம் மானியம்

செடி முருங்கை சாகுபடி செய்வதற்கு அரசு ரூ. 25 ஆயிரம் மானியம் வழங்குவதாக பல்லடம் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கே. எஸ். சுகந்தி தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: செடி முருங்கை வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய தன்மை கொண்டது. ஜூலை- அக்டோபர் மாதங் களில் செடி முருங்கையைப் பயிர் செய்யலாம். விவசாயிகளின் வரு மானத்தை அதிகரிக்கும் விதமாக செடி முருங்கையும், அதன் ஊடு பயிராக வீரிய ஒட்டு ரக தக்காளியும் சாகுபடி செய்வதற்காக மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத் துறை ஹெக்டருக்கு ரூ. 25 ஆயிரம் மதிப்பிலான விதைகளையும், இடுபொருட் களையும் மானியமாக வழங்கவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் கணினி சிட்டா நகல், கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து நில உரிமைச் சான்று, அடங்கல், குடும்ப அட்டை நகல், இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படங்களுடன் பல்லடம், தோட்டக்கலைத் துறை அலுவலகத்தை அணுகலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தோட்டக்கலைப் பயிர் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பப் பயிற்சி

தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில், விவசாயிகள் அதிக லாபம் பெறுவதற்காக நவீன தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கட 0சலம் தெரிவித்துள்ளார். தோட்டக் கலைத் துறை மூலம், திண்டுக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர்

தெரிவித்தது: தமிழக அளவில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும் மாவட்டங்களில், திண்டுக்கல் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. தமிழக அரசு 2013-14 நிதியாண்டில் தோட்டக்கலை துறை மூலம், ரூ.13.94 கோடி மதிப்பீட்டில், 7,770 ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதன்மூலம், 6,607 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். அதேபோல், நிகழ் நிதியாண்டில் 4,313 ஹெக்டேருக்கு, ரூ.19.30 கோடி மதிப்பீட்டில் தோட்டக்கலைத் துறை திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. ரெட்டியார்சத்திரம் ஊராட்சி கொத்தப்புள்ளி பகுதியில், தேசிய மருத்துவப் பயிர்கள் இயக்கத் திட்டத்தின் மூலம் 50 சதவீத மானியத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கண்வலிக் கிழங்கு, காமாட்சிபுரம் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள சம்மங்கிப் பூ, மெய்ஞானபுரம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள காய்கறிப் பந்தல் உள்ளிட்டவற்றை ஆட்சியர் ந. வெங்கடாசலம் பார்வையிட்டார். தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ், ரூ. 10.18 கோடியில், ரெட்டியார்சத்திரம் பகுதியில் காய்கறி மகத்துவ மையம் செயல்பட உள்ளது. இஸ்ரேல் விவசாயத் தொழில்நுட்பம் குறித்து, இந்த மையத்தில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, குறைந்த செலவில் அதிக உற்பத்தி செய்து, விவசாயிகள் பயனடைய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

## ஓமலூர் கோழிப் பண்ணைகளில் அதிகாரிகள் திடீர் ஆய்வு

ஓமலூர் பகுதியில் உள்ள கோழி, வாத்துப் பண்ணைகளில் கால்நடைத் துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். தமிழகத்தில் பறவைக் காய்ச்சல் வராமல் தடுக்க கால்நடைத் துறை அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். சேலம் மாவட்டம், ஓமலூர் கோட்டத்தில் நூற்றுக்கணக்கான இறைச்சிக்கான கோழி பண்ணைகள் உள்ளன. மேச்சேரி, நங்கவள்ளி ஆகிய ஒன்றியங்களில் முட்டைக்

கோழிப் பண்ணைகளும், கொளத்தூர், மேட்டூர் உள்ளிட்ட ஒரு சில பகுதிகளில் வாத்துப் பண்ணைகளும் உள்ளன. பறவைக் காய்ச்சல் பீதி அதிகரித்து கோழி இறைச்சி விற்பனை வெகுவாகக் குறைந்துள்ளது. இதன் காரணமாக ஓமலூர் கோட்ட கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் எஸ்.செந்தில்குமார் தலைமையிலான மருத்துவக் குழுவினர், அனைத்துக் கோழி, வாத்துப் பண்ணைகளை ஆய்வு செய்தனர். கோழிகளின் எடை, வளர்ச்சி, அவைகள் இரை உண்ணுதல்,விரட்டும் போது எந்தளவு வேகத்தில் ஓடுகின்றன என்பது குறித்தும் ஆய்வுகள் செய்தனர். மேலும், கோழிகளுக்கு எவ்வாறெல்லாம் நோய்கள் பரவுகின்றன. அதைத் தவிர்க்க எவ்வாறெல்லாம் பராமரிக்க வேண்டும். பண்ணைகளை எவ்வாறு வைத்திருக்க வேண்டும் என்பது குறித்து பண்ணையாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினர். அடுத்தடுத்து ஐந்து கோழிகளுக்கு மேல் இறந்தால் உடனடியாக ஆய்வுகள் செய்து, கோழிகளுக்கு உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தினர். வெளிப்புற வாகனங்கள் உள்ளே வரும் போது மருந்து தெளிக்க வேண்டும், பண்ணைக்குள் செல்லும் போது கால்களை கழுவ வேண்டும், அருகில் மரங்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றனர். வெளியில் இருந்து வரும் பறவைகள் மூலமாகவும் நோய் பரவும் அபாயம் இருப்பதால், அனைத்து வகையிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து வருவதாகவும், தமிழகத்தில் பறவைக் காய்ச்சல் நோய் பாதிப்புகள் இல்லாததால், பொதுமக்கள் எந்தவித அச்சமும் இன்றி, தாராளமாக கோழி இறைச்சி, முட்டைகளை நன்றாக வேக வைத்து சாப்பிடலாம் என்று தெரிவித்தனர். ஆய்வின் போது, ஓமலூர் கால்நடை மருத்துவர்கள் கே.செல்வகுமார், ஏ.கவிதா ஆகியோர் உடன் இருந்தனர்.

# கிருஷ்ணராஜ சாகர் அணையில் மிதவைக் கூண்டில் மீன் வளர்ப்புத் திட்டம்

கர்நாடக மாநிலம், கிருஷ்ணராஜ சாகர் அணையில் மிதவைக் கூண்டில் மீன் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று, அந்த மாநில மீன் வளர்ச்சித் துறை அமைச்சர் அபயசந்திர ஜெயின் தெரிவித்தார். இதுகுறித்து பெங்களூருவில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது: மைசூரு மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணராஜ சாகர் அணையில் மிதவைக் கூண்டில் மீன் வளர்ப்புப் பணிக்காக 48 மிதவைக் கூண்டுகள் அணையின் தண்ணீரில் மிதக்க விடப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூண்டிலும் 5 ஆயிரம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. நவமங்களூரு துறைமுகத்தில் மீன் வளர்க்க, பிடிக்க வாய்ப்பிருந்தது. அந்தத் துறைமுகத்தில் இருந்து தற்போது சரக்குப் போக்குவரத்து தொடங்கியிருப்பதால், மீன் வளர்ப்புக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மீன் வளர்ப்புக்கு வசதியாக குலியா துறைமுகத்தில் ரூ. 120 கோடி, ஹெஜமாடி கோடியில் ரூ.151 கோடி செலவில் புதிய மீன்பிடித் துறைமுகம் தொடங்க நிதியுதவி வழங்குமாறு மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இதே போல, பட்கல், கார்வார் துறைமுகங்களை விரிவுபடுத்த தலா ரூ.5 கோடியில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதேபோல, ரூ.50 கோடி செலவில் மங்களூரு துறைமுகம், ரூ.37 கோடி செலவில் மல்பே துறைமுகம், ரூ.26 கோடி செலவில் ஹொன்னாவர் துறைமுகத்தை விரிவுபடுத்தும் பணி நடைபெற்று வருகின்றன. மீன் வளர்ப்புக்குச் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு 75 சத செலவை மத்திய அரசு வழங்கி வந்தது. தற்போது அதை 40 சதமாகக் குறைத்துள்ளது. உள்நாட்டு மீன் வளர்ப்பு, தொழிலதிபர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. இதைத் தடுக்கும் வகையில், மீன் வளர்ப்பில் கூட்டுறவுச் சங்கங்களை ஈடுபடுத்த முடிவு செய்துள்ளோம். மாநிலத்தில் இருந்து ரூ. 1,200

கோடியில் ஒரு லட்சம் மெட்ரிக் டன் மீன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மீன் பிடிக்கும் படகுகளுக்கு 8 ஆயிரம் லிட்டர் டீசல் மானியமாக வழங்கப்படுகிறது. மாநிலத்தில் 3,750 மீன்பிடிப் படகுகள் உள்ளன. மாநிலத்தில் 60 கோடி மீன் குஞ்சுகளைத் தயாரிக்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். நவ.31-ஆம் தேதிவரை 42 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ஆலோசனை**

கும்மிடிப்பூண்டி: சம்பா நெற்பயிரில், அதிகரித்து வரும் புகையான் பூச்சி தாக்குதலை கட்டுபடுத்துவது குறித்து, தொழில்நுட்ப குழுவினர், நேரில் ஆய்வு மேற்கொண்டு, விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினர். கும்மிடிப்பூண்டி வட்ட அளவில், நடப்பு சம்பா பருவத்தில், 8,925 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. தற்போது, புகையான் பூச்சி தாக்குதல், குலைநோய் மற்றும் பாக்டீரியா இலை கருகல் நோயும் பரவலாக காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட பயிர் நிலங்களில் சிலவற்றை, திருவள்ளூர் மாவட்ட இணை வேளாண்மை இயக்குனர் சுந்தர்ராஜன் தலைமையில், திரூர் நெல் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் கொண்ட தொழில்நுட்பக் குழுவினர் பார்வையிட்டனர். பாதிப்புக்கு ஏற்றபடி, சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கினர்.

**மான்ய விலையில் காய்கறி விதைகள்**

விக்கிரவாண்டி: தோட்டக்கலைத் துறை சார்பில் மான்ய விலையில் காய்கறி விதைகள் வழங்கும் விழா நடந்தது. விக்கிரவாண்டி தோட்டக்கலைத்துறை இயக்குனர் அலுவலகத்தில் நடந்த விழாவிற்கு தோட்டக்கலை துணை இயக்குனர் டாக்டர் வீராசாமி தலைமை

தாங்கினார். ஒருங்கிணைந்த பண்ணைய கிராமங்களான ஆசூர், முட்டத்தூர் மற்றும் தரிசு நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தேர்வான செ.புதூர், ஈச்சங்குப்பம் ஆகிய கிராமங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்பட்டது. தோட்டக்கலை உதவி இயக்குனர்(பொறுப்பு) முருகன் பங்கேற்று, வீரிய ஒட்டு கத்தரி, வெண்டை, மிளகாய் மற்றும் கொத்தமல்லி விதைகளை மானியவிலையில் விவசாயிகளுக்கு வழங்கினார். உதவி வேளாண்மை அலுவலர் கயல்விழி மற்றும் விவசாயிகள் நாகப்பன், அய்யனார், வேலு, குமார் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் தட்சிணாமூர்த்தி நன்றி கூறினார்.

## நாமக்கல்லில்பருத்தி ஏலம்

நாமக்கல்:நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 2.90 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது.நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 210 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,300, குறைந்த பட்சமாக, 3,690 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 2.90 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, முத்தூர், கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு பகுதியை சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## கனகாம்பரம் பூக்களுக்கு உரிய விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி:கனகாம்பரம் பூக்களுக்கு, போதிய விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், நெல், கரும்பு, தென்னை, மஞ்சள், பருத்தி, மரவள்ளி கிழங்கு உள்ளிட்டவை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. சில ஆண்டுகளாக தோட்டக்கலை பயிர்களான மல்லி, கனகாம்பரம், முல்லை உள்ளிட்ட மலர்கள் மற்றும் முட்டைகோஸ், காளிஃபிளவர், அவரை உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, மலர் சாகுபடியில், விவசாயிகளுக்கு தினமும் வருமானம் கிடைப்பதால், தர்மபுரி மாவட்டத்தில், பாலக்கோடு, பென்னாகரம், மாரண்டஹள்ளி, தொப்பூர் பஞ்சப்பள்ளி உள்ளிட்ட பல பகுதிகளில் செண்டுமல்லி, சம்பங்கி, மல்லி, கனகாம்பரம் ஆகிய மலர்களை சாகுபடி செய்துள்ளனர். சந்தையில், கனகாம்பரம் பூவுக்கு தொடர்ந்து வரவேற்பு உள்ளதாலும், போதிய விலை கிடைத்து வருவதாலும், விவசாயிகள், அதிகளவில், கனகாம்பரத்தை சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது, கோவில் திருவிழா, திருமண சீஸன் நடந்து வருவதால், கனகாம்பரம் பூவுக்கு, சந்தையில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. ஒரு கிலோ கனகாம்பரம், 250 முதல், 300 ரூபாய் வரை விற்பனையாவதால், கனகாம்பரம் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். இதுகுறித்து, விவசாயி கணேசன் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில், சில ஆண்டாக பருவமழை பெய்யாததால், வறட்சி நிலவி வருகிறது. இதன் காரணமாக, பிரதான பயிர்களை சாகுபடி செய்ய முடியாமல், விவசாயிகள் கவலையில் உள்ளனர். குறைந்த தண்ணீர் வசதியில், போதிய விலை கிடைக்க கூடிய மலர் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கனகாம்பரம் பூவுக்கு, ஆண்டு முழுவதும் சீரான விலை

கிடைத்து வருவதால், தர்மபுரி மாவட்ட விவசாயிகள், கனகாம்பரம் பூக்களை சாகுபடி செய்து வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**துவரையில் திரட்சியானகாய்கள் பெற அறிவுரை**

கிருஷ்ணகிரி:துவரையில் திரட்சியான காய்கள் பெற, வேளாண்மை உதவி இயக்குனர் அறிவுரை வழங்கியுள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி வட்டாரத்தில், 350 ஹெக்டேர் பரப்பளவில், துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது, துவரை பூக்கும் நிலையில் உள்ளது. துவரையில் நல்ல திரட்சியான காய்கள் பெறவும், 20 சதவீதம் கூடுதல் மகசூல் பெறவும் டி.ஏ.பி., இரண்டு சதவீத கரைசல் இலைவழி தெளிப்பு செய்ய வேண்டும். இதுகுறித்து, வேப்பனஹள்ளி பகுதியில் உள்ள பன்னப்பள்ளியை சேர்ந்த ராமப்பா என்பவர் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ள பகுதியில், வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ், இரண்டு சதவீத டி.ஏ.பி., கரைசல் தெளித்து, செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன் கூறியதாவது:துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ள, ஒரு ஹெக்டேருக்கு தேவையான, 10 கிலோ டி.ஏ.பி., உரத்தை, 25 லிட்டர் தண்ணீரில் தெளிப்புக்கு முந்தைய நாள் ஊர வைத்து நன்றாக கரைக்க வேண்டும். அடுத்த நாள் மேலோட்டமான தெளிந்த கரைசலை மட்டும் எடுத்து, அந்த கரைசலை, 475 லிட்டர் தண்ணீரில் கலந்து, மாலை வேளையில் செடி முழுவதும் நன்றாக நனையும்படி பூக்கும் சமயத்தில், ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறையும் தெளிக்க வேண்டும். இதன் மூலம் மகசூலை அதிகம் பெருக்கலாம். இவ்வாறு கூறினார்.

**மஞ்சூரில் பீச் பழ சீசன் துவக்கம்**

மஞ்சூர் : மஞ்சூர் சுற்றுவட்டார பகுதியில் "பீச்' பழம் சீசன் துவங்கியுள்ளது. மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் வீடுகள், தேயிலை தோட்டம், அலுவலக வளாகங்களில் உள்ள பீச் மரங்களில் தற்போது

பழத்திற்கான காய்விடும் சீசன் துவங்கியுள்ளது. மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள மரங்களில் காய் மற்றும் பீச் பழ பூக்கள் அதிகளவில் பூத்துள்ளன. சுவை மிக்க இந்த பழத்தை பொதுமக்கள் அதிகளவில் விரும்பி உண்டு வருகின்றனர். மஞ்சூர் வழியாக வரும் சுற்றுலா பயணிகளும் இதனை வாங்கி செல்கின்றனர்.

## உரக்கலவை இயந்திரம் அமைக்கும் பணிகள்

ஊட்டி : நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில், சங்கத்தை தோற்றுவித்த ஆரி கவுடர் பிறந்த நாள் விழா, நேற்று கொண்டாடப் பட்டது. இவ்விழாவில், கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் கண்ணபிரான் கூறியதாவது: கூட்டுறவு விற்பனை சங்க, மேட்டுப்பாளையம் உரக்கலவை பிரிவின் மூலம், உருளைக் கிழங்கு, மலைக் காய்கறிகள் மற்றும் தேயிலை, காபி போன்ற தோட்டப் பயிர்களுக்கு கலவை உரங்கள் வழங்கப்படுகிறது. பயிர் பாதுகாப்புக்கு தேவையான பூச்சிக் கொல்லி மருந்து, விவசாய உபகரணங்களும் விற்பனை நிலையங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.தற்போது, ஊட்டியில் கம்ப்யூட்டர் எடை மேடை இயந்திரம்; மேட்டுப்பாளையம் கிளையில் உரக்கலவை இயந்திரம் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. நடப்பாண்டு இதுவரை, 8,991 டன் எடை கொண்ட 20.59 கோடி ரூபாய் மதிப்புள்ள உருளைக் கிழங்கு, 1,271 டன் எடை கொண்ட 4.22 கோடி ரூபாய் மதிப்பிலான மலை காய்கறி மற்றும் வெள்ளைப் பூண்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.தவிர, 10.60 கோடி ரூபாய் மதிப்பிலான 7,719 டன் எடை கொண்ட உரங்கள், 43 லட்சம் மதிப்பிலான பூச்சிக் கொல்லி மருந்துகள், 1.08 கோடி ரூபாய் மதிப்பில் விவசாய கருவிகள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. நகைக் கடன் பிரிவு மூலம், நடப்பாண்டு இதுவரை 12.75 கோடி ரூபாய் அளவுக்கு நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது. என்.சி.எம்.எஸ்., திருமண

மண்டபத்தை புதுப்பிக்கும் பணி நடந்து வருகிறது. இவ்வாறு, கண்ணபிரான் கூறினார்

## கரும்பு உற்பத்தியாளர் சங்க கூட்டம்

அரியலூர்: அரியலூாரில் கரும்பு உற்பத்தியாளர் சங்க கூட்டம் நடைபெற்றது.அரியலூர் கோத்தாரி சர்க்கரை ஆலையில் நடைபெற்ற, கரும்பு உற்பத்தியாளர் சங்க கூட்டத்துக்கு, சங்க தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.கூட்டத்தில், கோத்தாரி சர்க்கரை ஆலையில் பதிவு செய்த கரும்புகரை ஆலைக்கு கொண்டு வரவும், பதிவுசெய்யாத கரும்பு, வெளி மாவட்டங்களிலிருந்து, இங்கு கொண்டு வர அனுமதிக்க முடியாது. சாத்தமங்கலம் கோத்தாரி சர்க்கரை ஆலை, 20132014ம் பருவ ஆண்டுக்கு, தனது கரும்பு விவசாயிகளுக்கு சேர வேண்டிய நிலுவை தொகையை கொடுக்காமல் சர்க்கரை ஆலையை திறக்க கூடாது. உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மக்காச்சோள மகசூலை அதிகரிக்கும் "மேக்சிம்'

காந்திகிராமம் : "மக்காச்சோள மகசூலை "மேக்சிம்' ஊட்டச்சத்துகள் அதிகரிக்கும்' என காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மையம் தெரிவித்துள்ளது. அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் கூறியதாவது: "மக்காச்சோளத்திற்கு அதிக உரத்தேவை உள்ளது. தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்துகள் போன்ற பேரூட்டங்கள், துத்தநாகம், இரும்பு, மெக்னீசியம் போன்ற நுண்ணூட்டங்களின் குறைபாடு மக்காச்சோள வளர்ச்சியை பெரிதும் பாதிக்கும். இதனால் செடிகள் வளராமல் இலைகள் பச்சையத்தை இழந்து தண்டுகள் மெலிந்து காணப்படும். கதிர்களில் மணிகள் சரிவர பிடிக்காமல் மகசூலும் பாதிக்கப்படும். இதனை தவிர்க்க ஏக்கருக்கு அடியுரமாக 30 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். மேலுரமாக விதைத்த 25 வது

நாள் 60 கிலோ யூரியா மற்றும் 45 வது நாள் 30 கிலோ யூரியாவை இட வேண்டும். இதனால் பேரூட்டங்களின் குறைபாடுகள் தவிர்க்கப்படும். தமிழ்நாடு வேளாண் பல்கலை தயாரித்துள்ள "மக்காச்சோள மேக்சிம்' ஊட்டச்சத்துகளை ஏக்கருக்கு 3 கிலோ அளவில் 200 லிட்டர் நீரில் கலக்க வேண்டும். பின் ஒட்டும் திரவம் சேர்த்து பூக்கள் மற்றும் மணிகள் உருவாகும் பருவத்தில் தெளிக்க வேண்டும். இதனால் கதிரில் மணிபிடிக்கும் திறன் அதிகரிக்கும். மணிகள் நன்கு திரட்சியாக இருக்கும். விளைச்சல் 20 சதவீதம் வரை கூடும். ஏக்கருக்கு மானாவாரியில் 3,000 கிலோவும், இறவையில் 6,000 கிலோவும் கிடைக்கும். இதனை ரெட்டியார்சத்திரம் ஆலத்தூரான்பட்டியில் அறிமுகப்படுத்தியுள்ளோம். "மேக்சி' ஊட்டச்சத்து 30 பேருக்கு இலவசமாக வழங்கியுள்ளோம்,' என்றார்.

## <u>பறவைக்காய்ச்சல் கண்காணிப்பு தொடர்கிறது</u>

கம்பம் : கேரளாவில் ஆழப்புழா, கோட்டயம், பத்தனம்திட்டா மாவட்டங்களில் பறவைக்காய்ச்சல் பரவியது. நோய் பாதித்த 2.5 லட்சம் வாத்துகள் கொல்லப்பட்டன. கேரளாவில் இருந்து நோய் தமிழ் நாட்டிற்குள் பரவுவதை தடுக்க கேரள- தமிழ்நாடு எல்லையில் சோதனை சாவடிகளில் கேரளாவிலிருந்து வரும் வாகனங்களில் மருந்துகள் தெளிக்கப்பட்டு வருகிறது. போடிமெட்டு, கம்பமெட்டு, குமுளி ஆகிய சோதனை சாவடிகளில் கால்நடைபராமரிப்புத் துறை பணியாளர்கள் இந்த பணியில் ஈடுபட்டுள்ளனர். தேனி மாவட்ட இணை இயக்குனர் தனசேகரன் ஆய்வு செய்தார். டாக்டர்கள் காமேஷ்கண்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர். பறவைக்காய்ச்சல் கட்டுக்குள் வந்துள்ள போதும், 10 நாட்கள் கண்காணிப்பு தொடர உள்ளது.

**<u>இலைசுருட்டுப்புழு தாக்குதல் அதிகரிப்பு</u>**

சிவகங்கை : கண்ணங்குடி வட்டார வேளாண் உதவி இயக்குனர் பொறுப்பு விஜயன் தெரிவித்துள்ளதாவது: கண்ணங்குடி வட்டாரத்தில் சாகுபடி செய்துள்ள நெல் 70 நாட்கள் நிலையில் உள்ளது. தற்போது விட்டு விட்டு மழை பெய்ததாலும், மிகவும் குளிர்ச்சியான நிலையில் இலை சுருட்டுப்புழு தாக்குதலும், செவ்வட்டை எனப்படும் இலைகருகல் நோயும் அதிகமாக காணப்படும். இதனால் மகசூல் பாதிக்கப்படும். இதனை தடுக்க ஒரு நீளமான கயிற்றை இரு ஆட்கள் கொண்டு வரப்பின் இருபுறமும் பிடித்து கொண்டு போனால் இலையில் உள்ள புழுக்கள் நிலத்தில் விழுந்து விடும். அப்போது பாசன வாய்க்காலில் 6 லிட்டர் மண்ணெண்ணெய் ஊற்றி விட்டால் புழுக்கள் இறந்து விடும்.வேப்பங் கொட்டை சாறு ஒரு லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பறவை காய்ச்சல் அறிகுறி இல்லை கால்நடை துறை அதிகாரி தகவல்</u>**

கோவை, : கோவை மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் (பொறுப்பு) பெருமாள்சாமி கூறுகையில், “ அன்னூர் உள்ளிட்ட பகுதியில் ஆய்வு நடத்தியதில் பறவை காய்ச்சல் அறிகுறி தென்படவில்லை. பறவை காய்ச்சல் இருந்தால் கோழியின் தலை வீக்கமாக இருக்கும். ரத்த கசிவு ஏற்படும். கோழியின் தொடை பகுதியில் ரத்த கட்டு, வீக்கம் காணப்படும். ஆனால் கோவை மாவட்டத்தில் இந்த அறிகுறி யில் எந்த கோழியும் கண்டறியப்படவில்லை. சில கோழிகள்

வெள்ளை கழிச்சலில் (ராணிக்கட்) இறந்தன. சுகாதாரமான சூழ்நிலையில் கோழிகளை பராமரிக்காமல் விடுவதால் இந்த நோய் தாக்கம் ஏற்படுகிறது. இதை தவிர்க்க, அனைத்து கால்நடை மருத்துவமனை, மருந்தகங்களில் கோழிகளுக்கு குறிப்பாக புறக்கடை கோழிகளுக்கு வாரந்தோறும் சனிக்கிழமை ஆர்.டி. வேக்சின் என்ற தடுப்பூசி போடப்படுகிறது. தேவையான அளவு தடுப்பூசிகள் தயார் நிலையில் மருத்துவமனைகளில் வைக்கப்பட்டுள்ளது. கழிச்சல் உள்ளிட்ட நோய் அறிகுறி இருந்தால் கோழிகளை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு வரலாம் என தெரிவித்து வருகிறோம். கோழி இறைச்சி, முட்டை சாப்பிட்டால் பாதிப்பு எதுவும் வராது. முட்டை, இறைச்சியை வேக வைத்து சாப்பிடுகிறோம். 70 டிகிரி வெப்பநிலையில், இறைச்சியில் எந்த கிருமி இருந்தாலும் அழிந்து விடும். எனவே சிக்கன் சாப்பிடுவதால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாது, '' என்றார்.

## <u>மேட்டூர் அணை மீண்டும் திறப்பு மின் உற்பத்தியும் தொடங்கியது</u>

மேட்டூர், : வங்க கடலில் உரு வான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரண மாக கடந்த சில நாட்களாக காவிரி டெல்டா மாவட்டங்களில் கன மழை பெய்து வந்தது. இதனால், கடந்த 28ம் தேதி மேட்டூர் அணை யில் இருந்து டெல்டா பாசனத்திற்கான தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. கால்வாய் பாசனத்திற்கு மட்டும் வினாடிக்கு 700 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், டெல்டா மாவட்டங்களில் தற்போது மழை குறைந்துள்ளது. இதனால் மேட்டூர் அணையில் இருந்து நேற்று காலை 10 மணி முதல், வினாடிக்கு 9,000 ஆயிரம் கனஅடி வீதம் டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. நேற்று காலை அணைக்கு வினா டிக்கு 5167 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அதேவேளையில் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால், நேற்று முன் தினம் காலை 6,533 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை வினாடிக்கு 5,167 கனஅடியாக சரிந்தது.

அணையின் நீர்மட்டம் 105.30 அடியாகவும், நீர்இருப்பு 71.88 டிஎம்சியாகவும் இருந்தது. அணையில் இருந்து மீண் டும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் நீர்மின் நிலையங்களில் மீண்டும் மின் உற்பத்தி தொடங்கியது.

## ஜலகண்டாபுரத்தில் 5.2 டன் தேங்காய் பருப்பு ரூ3.5 லட்சத்திற்கு ஏலம்

ஜலகண்டாபுரம், : ஜலகண்டாபுரத்தில் உள்ள வேளாண் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில் 5.2 டன் தேங்காய் பருப்பு 3.5 லட்சத்திற்கு விற்பனையானது. சேலம் மாவட்டம், ஜலகண்டாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கொங்கணாபுரம் கிளை சேவை மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு வாரந்தோறும் செவ்வாய்கிழமைகளில் நடைபெறும் தேங்காய் பருப்பு ஏலத்தில் காங்கேயம், ஊத்துக்குளி, பெருந்துறை, திருப்பூர், திருச்செங்கோடு, சேலம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் கலந்துகொள்வார்கள். நேற்று முன்தினம் நடைபெற்ற ஏலத்தில் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான சூரப்பள்ளி, ஆவடத்தூர், சின்னசோரகை, பெரியசோரகை, பனிக்கனூர், தோரமங்கலம், கரிக்காப்பட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 97 மூட்டைகளில் 5,268 கிலோ தேங்காய் பருப்புகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். சென்ற வாரம் குறைந்தபட்சமாக கிலோ ஹி 60க்கும், அதிகபட்சமாக ஹி 76.50க்கும் ஏலம் விடப்பட்டது. இந்த வாரம் குறைந்த பட்சமாக கிலோ 70 ரூபாய்க்கும், அதிகபட்சமாக கிலோ 80.15 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது. இதன் மூலம் ரூ3.50 லட்சத்திற்கு வர்த்தகம் நடந்தது. சென்ற வாரத்தை விட இந்த வாரம் சராசரியாக கிலோவுக்கு 3.65 காசுகள் அதிகம் கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**இடைப்பாடி சந்தையில் ரூ10 லட்சத்திற்கு காய்கறிகள் விற்பனை**

இடைப்பாடி, : இடைப்பாடி புதன் சந்தையில், நேற்று ஒரே நாளில் ரூ10 லட்சத்திற்கு காய்கறிகள் விற்பனையானது. இடைப்பாடி புதன் சந்தையில் நேற்று பெங்களூர், ஓசூர், ராயக்கோட்டை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து 48 டன் காய்கறிகள் வந்திருந்தது. பெரிய வெங்காயம் கிலோ ரூ15 முதல் 20 வரையும், சின்ன வெங்காயம் கிலோ ரூ25 முதல் 30 வரையும், உருளை கிழங்கு கிலோ ரூ25 முதல் 30 வரையும், பச்சைமிளகாய் ரூ20 முதல் 22 க்கும் விற்பனை ஆனது. கார்த்திகை தீப திருநாளை முன்னிட்டு ஒரு விளக்கு ரூ1 முதல் 25 வரை விலை போனது. புதன் சந்தையில் நேற்று ஒரு நாளில் ரூ10 லட்சத்திற்கு வர்த்தகம் நடந்தது.

**வடக்கு உழவர் சந்தையில் ரூ.4.39 கோடி காய்கறிகள் விற்பனை**

அனுப்பர்பாளையம், : திருப்பூர் வடக்கு உழவர் சந்தைக்கு, காளி பாளையம், குன்னத்தூர், பெருமாநல்லூர், அவினாசி, தெக்கலூர், கருவலூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது விளை பொருட்களான காய்கறிகளை தினமும் கொண்டு வந்து விற்று வருகின்றனர். இந்த சந்தையில் நாள் ஒன்றுக்கு, சராசரியாக 53.6 டன் காய்கறிகள் விற்பனையாகும். நவம்பர் மாதத்தில் மொத்தம் 1619 டன் காய்கறிகள் வந்திருந்தன. நாள் ஒன்றுக்கு ரூ.14.6 லட்சம் வீதம் மொத்தம் ரூ.4.39 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது. இங்கு நவம்பர் மாதம் 4925 விவசாயிகள் காய்கறிகளைக் கொண்டு வந்து விற்று, பயனடைந்து வந்துள்ளனர். ஒரு நாளைக்கு, 6852 நுகர்வோர் வீதம், நவம்பர் மாதம் மட்டும் 2 லட்சத்து 8 ஆயிரத்து 560 பேர் வடக்கு உழவர் சந்தைக்கு காலையிலும் மாலையிலும் வந்து ஏராளமான காய்கறிகளை வாங்கி பயனடைந்துள்ளனர். இது தொடர்பாக, திருப்பூர் வடக்கு உழவர் சந்தை

நிர்வாக அலுவலர் ராதாகிருஷ்ணன் கூறுகையில், 'தொடர் மழையின் காரணமாக பூக்கின்ற பூக்கள் காய்க்காமல் கீழே விழுகின்றன. செடிகளுக்கு அடிக்கும் மருந்துகளும் பனிமழையினால் பலனளிப்ப தில்லை. இதனால், கத்தரிக்காய், தக்காளி ஆகியவற்றில் காய்ப்புழு வினால், அழுகல், சொத்தை விழுகிறது. சென்ற மாதத்தை விட வரத்து குறைந்து காய்கறிகளின் விலை அதிகரித்து உள்ளது. கடந்த நவம்பர் மாதம் 143 விவசாயிகள் ரூ.1.27 லட்சம் மதிப்புள்ள 5.6 டன் காய்கறி களை, திருப்பூர் வடக்கு உழவர் சந்தை குளிர் பதன கிடங்கில் பாதுகாப்பாக வைத்திருந்தனர்' என்றார்.

## நீர் மேலாண்மை பயிற்சி

கரூர், -: தமிழ்நாடு விவசாயிகள் பாசன அமைப்புமுறை மேலாண்மை சட்டத்தின்படி, பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை அமராவதி வடிநிலக்கோட்டம் சார்பில் கரூர் மாவட்டத்தில் வரையறுக்கப்பட்ட ஆற்று நீரை பயன்படுத்துவோர் சங்கங்களுள் பள்ளப்பாளையம் வாய்க்கால் நீரைபயன்படுத்துவோர் சங்கம், கோயம்பள்ளி, சோமர் கிராமநீரை பயன்படுத்துவோர் சங்கங்களின் மேலாண்மைக்குழு உறுப்பினர்கள், துணைக்குழு உறுப்பினர்களுக்கு 2 நாள் திறன் வளர் கட்டமைப்பு பயிற்சி நேற்று கருரில் நடைபெற்றது.பள்ளபாளையம் வாய்க்கால் நீரைபயன்படுத்துவோர் சங்க தலைவர் ராஜாமணி பழனிசாமி தலைமை வகித்தார். கோயம்பள்ளி, சோமூர் நீரை பயன்படுத்துவோர் சங்கம் ராமசாமி, உதவி பொறியாளர் ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பயிற்சி அலுவலர் காளிமுத்து, சுரேஷ்குமார் ஆகியோர் நெறிப்படுத்தினர். மகேஸ்வரி, நிஷாந்தினி, வெங்கடேஸ்வரன், பாசன உதவியாளர்கள் பயிற்சியை ஒருங்கிணைத் தனர். பாசன அமைப்பு முறை மேலாண்மை சட்டத்தின்படி நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் எவ்வாறு செயல்படுவது, சங்கங்களின் பணிகள், கடமைகள் பொறுப்புகள், தற்போதைய தண்ணீர் தொடர்பான

பிரச்னைகள், தீர்வுகள் குறித்தும், பங்கேற்பு பாசன மேலாண்மை மூலம் நீர்மேலாண்மை, குறைந்த அளவு தண்ணீரில் அதிக வருவாய் ஈட்டுவது குறித்தும் பங்கேற்பாளர்களுக்கு விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

## செட்டிக்குளத்தில் ஏலம் 29 டன் சின்னவெங்காயம் ரூ7.30 லட்சத்துக்கு விற்பனை

பெரம்பலூர்,: செட்டிக்குளம் வெங்காய வணிகவளாகத்தில் நடந்த ஏலத்தில் ஒரேநாளில் 29 டன் சின்னவெங்காயம் ரூ.7.30 லட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக கலெக்டர் கலெக்டர் தரேஸ்அகமது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு : பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின்முலம் கடந்த 2ம்தேதி திறந்தமுறைஏலம் நடத்தப்பட்டது. இதில் செட்டிகுளம், நாட்டார்மங்கலம், சிறுவயலூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, சிறுவாச்சூர், மாவலிங்கை, எசனை, லாடபுரம், மருவத்தூர் ஆகிய 10க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 108 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை திறந்தமுறை ஏலத்திற்குக் கொண்டு வந்து விற்பனை செய்தனர். இதனை தமிழகஅளவில் பொள்ளாச்சி, திண்டுக்கல், திருநெல்வேலி, ஒட்டன்சத்திரம், மணப்பாறை, மண்ணச்சநல்லூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் செட்டிக்குளம், சத்திரமனை, பொம்மனப்பாடி, பாடாலூர், இரூர், சிறுவயலூர் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த 22 வியாபாரிகள் 476 மூட்டைகள், அதாவது 28,995கிலோ எடைகொண்ட வெங்காயத்தினை ஏலத்தில் எடுத்தனர். இதில் சின்ன வெங்காயம் அதிகப்பட்சமாக கிலோ ரூ.52க்கும், சராசரியாக ஒரு கிலோ ரூ.25க்கும் விற்பனையானது. இதன்மூலம் ரூ.7,28,590க்கு விற்பனை நடைபெற்றது. விற்பனை செய்த விவசாயி களுக்கு ஏலம் எடுத்தவர்களால் பணம் உடனடியாக

வழங்கப்பட்டது. செட்டிக்குளம் வெங்காய வணிகவளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக் கிழமைகளில் ஏலம் நடத்தப்படுகிறது. எனவே விவசாயிகள் தங்களது வெங்காய விளைபொருளை இன்று (4ம்தேதி) கொண்டுவந்து விற்பனை செய்து பயன்பெறலாம் எனத்தெரிவித்துள்ளார்.

## சோழமாதேவி வேளாண் மையத்தில் 10ம் தேதி விவசாயிகளுக்கு இலவச தொழில் நுட்ப பயிற்சி

அரியலூர், : சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில், வரும் 10ம் தேதி முதல் 6 நாட்கள் விவசாயிகளுக்கு இலவச தொழில் நுட்ப பயிற்சி நடைபெற உள்ளது என மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ராஜ்கலா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர்வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியம் சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில், விவசாயிகளுக்கு பல்வேறு வகையான பயிர்களில் இலவச தொழில் நுட்ப பயிற்சி வரும் 10ம் தேதி துவங்குகிறது. அதன்படி, வரும் 10ம் தேதி நிலக்கடலையில் ஒருங்கிணைந்த மேலாண்மை மற்றும் மதிப்பூட்ட பொருட்கள் தயாரித்தல், 11ம் தேதி வீட்டு உபயோக பொருட்கள் தயாரித்தல், 16ம் தேதி முதல் 18ம் தேதி வரை முந்திரி சாகுபடியில் தொழில் நுட்ப பயிற்சி, 20ம் தேதி காளான் வளர்ப்பு மற்றும் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் ஆகிய இலவச பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

## சாகுபடி செய்துள்ள பயிர்களில் கூடுதல் மகசூல் பெற உயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும்வேளாண் அதிகாரி யோசனை

பொன்னமராவதி, : பொன்னமராவதி வட்டாரத்தில் நடப்பு ரபி பருவத்தில் நெல், பயறுவகை மற்றும் நிலக்கடலை பயிர்களை சாகுபடி செய் துள்ள விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற ரசாயன உரங்களை குறைத்து உயிர் உரங்களை பயன்படுத்த முன்வர வேண்டும் என

வேளாண் அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் ஜெய பாலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நடப்பு ரபி பருவத்தில் நெல், உளுந்து மற்றும் நிலக்கடலை சாகுபடி செய்து ள்ள விவசாயிகள் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து உரத்தேவைக்கு பெரும்பாலான விவசாயிகள் ரசாயன உரங்களையே நம்பி உள்ளனர். ஆனால், நாளுக்கு நாள் உயர்ந்து வரும் உர விலை யினால் ரசாயன உரங்களை தொடர்ந்து வாங்கி பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் விவசாயிகள் உள்ளனர். எனவே, ரசாயன உரத்தேவையை குறைத்து நஞ்சில்லாத உணவு உற்பத்தியை பெருக்க விரும்பும் விவசாயிகள் உயிர் உரங் களை பயன்படுத்துவதற்கு முன்வர வேண்டும். உயிர் உரங்களை பயன்படுத்துவதால் காற்றிலுள்ள நைட் ரஜன் வாயுவை தழைச்சத்தாக மாற்றி பயிர்களுக்கு அளிக்கிறது. மண்ணில் கிடைக்காத நிலையில் உள்ள மணிச்சத்தை பயிரு க்கு எளிதில் கிடைக்க செய்கிறது. நுண்ணுயிர்கள் பயிர் வளர்ச்சி ஊக்கியான இன் டோல் அசிட்டிக் அமி லம், ஜிப்ரலின், பயோட்டின் மற்றும் வைட்டமின்'பி" ஆகியவற்றை உற்பத்தி செய்து பயிர்கள் செழித்து வளர உதவுகிறது. நோய்களுக்கான எதிர்ப்பு சக்தி யை மண்ணில் உண்டாக்குகிறது . பயிர்களுக்கு வறட் சியை தாங்கும் சக்தி யை கொடுக்கிறது. மண் வளம் பாதுகாக்கப் படுகிறது. மாசற்ற சுற்றுப்புற சூழ்நிலை யை ஏற்படுத்துகிறது. இந்த உயிர் உர பாக்கெட்டுகளை ஒரு ஏக்கருக்கு பயன்படுத்தும் போது நெல் பயிருக்கு அசோஸ்பைரில்லம் (நெல்) 10 மற்றும் பாஸ்போபாக்டீரியா 10 என்ற அளவிலும், சிறுதானிய பயிர்களுக்கு அசோஸ்பைரில்லம் (இதர வகை) 7 மற்றும் பாஸ்போபாக்டீரியா 7 பாக்கெட் என்ற அளவிலும், நிலக்கடலை மற்றும் பயறு வகை பயிர்களுக்கு ஏக்கருக்கு ரைசோபியம் 5 பாக்கெட் மற்றும் பாஸ்போபாக்டீரியா 5 பாக்கெட் என்ற அளவிலும் பயன்படுத்த வேண்டும். இதே போல, தற்போது வேளாண்துறை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திரவ நுண்ணுயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியாவை பயன் படுத்தியும்

உரச்செலவை குறைக்கலாம். திரவ உயிர் உரங்களை பொறுத்தவரை 100 மிலி அளவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள நுண்ணுயிர் பாட்டில்கள் தற்போது வேளாண் விரிவாக்க மையத்தில் வினியோகம் செய்யப் படுகிறது, இதனை விதை நேர்த்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு 10 மிலி வீதமும், நாற்றினை நனைத்து நடவு செய்ய ஏக்கருக்கு 100 மிலி வீதமும், நடவு வயலில் நேரடியாக இட 200 மிலி வீதமும் பயன்படுத்த வேண்டும். எனவே, பொன்னமராவதி வட்டார விவசாயிகள் அனைவரும் உயிர் உரங்களை வாங்கி பயன்படுத்தி உரச்செலவை குறைத்து அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

**<u>வம்பனில் நாளை தர்பூசணி, முலாம் பழ சாகுபடி நவீன தொழில்நுட்ப பயிற்சி விவசாயிகளுக்கு அழைப்பு</u>**

ஆலங்குடி, : ஆலங்குடியை அடுத்த வம்பன் வேளாண் அறிவியல் நிலைய பயிற்சி மையத்தில் தர்பூசணி மற்றும் முலாம் பழ சாகுபடியில் அதிக வருமானம் பெற நவீன தொழிலநுட்பங்கள் குறித்த ஒருநாள் பயிற்சி நாளை (5ம் தேதி) நடைபெற உள்ளது. இது குறித்து வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ஞானமலர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் 1.54 லட்சம் எக்டர் நிரப்பரப்பில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யப் பட்டு வருகின்றது. இதில் 21.615 எக்டர் தோட்டக்கலைப் பயிர்கள் நீர் ஆதாரம் உள்ள பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி செய்யும்போது விவசாயிகள் நல்ல வருமானத்தினை பெறுகின்றனர். இதில் தர்பூசணி மற்றும் மூலாம் பழம் போன்றவை 2 முதல் 3 மாதங்களில் அதிகமான வருமானத்தை கொடுக்கக்கூடியது. ஒரு ஏக்கர் சாகுபடி செய்தால் ஒரு லட்சத்திற்க்கும் மேலான வருமானத்தை மிகக் குறைந்த நாட்களில் பெறமுடியும். ஆனால், எப்பொழுது விதைத்தால் காய்கள் அதிக விலைக்கு விற்பனையாகும், எந்த வீரிய ஒட்டு ரகத்தினை பயன்படுத்தினால் புதுகை மாவட்ட தட்ப,வெப்ப நிலையில் அதிக மகசூல் மற்றும் விலை மதிப்பு இருக்கும், நீர் குறைவாக இருந்தால்

சொட்டு நீர் அமைப் பில் சாகுபடி முறை கள், ஆட்கள் இன்றி களைகள் மேலாண்மை செய்தல், வயதினை குறைக்க முட்டை குழி தட்டுகள் நாற்று உற்பத்தி செய்து நடவு செய்தல், காய்கள் அதிகமாக உருவாக பெண்பூக்களின் எண்ணிக்கையி னை அதிகபடுத்த எத்ரல் தெளிக்கும் முறைகள், சொட்டு நீர் பாசனத்தில் எந்த உரத்தினை எவ்வளவு இடவேண்டும், எத்தனை நாளைக்கு ஒரு முறை இடவேண்டும். மேலும் தர்பூசணி மற்றும் முலாம் பழத்தினை பல்வேறு வகையான பூச்சிகளும், நோய்களும் தாக்குதலில் இருந்து கட்டுப்படுத்துதல் மற்றும் விற்பனை வாய்ப்புகள் குறித்து வல்லுனர்களால் எடுத்துரைக்கப் படவுள்ளது. ஆகையினால் தர்பூசணி மற்றும் மூலாம் பழத்தில் நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து ஒரு நாள் இலவச நிலையப் பயிற்சி நாளை வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## <u>குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் மூலம் உழவர் மன்ற அமைப்பாளர்கள் புதுச்சேரிக்கு கண்டுணர்வு சுற்றுலா</u>

அன்னவாசல், : குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம் அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் உழவர் மன்ற அமைப்பாளர்கள் கண்டுணர்வு சுற்றுலாவாக புதுச்சேரிக்கு சென்று வந்தனர். புதுக்கோட்டை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான் வழிகாட்டுதலின்படி உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி அறிவுரையின்படி உழவர் பயிற்சி நிலைய உழவர் மன்ற அமைப்பாளர்களை புதுச்சேரிக்கு வேளாண் தொழில்நுட்பங்களை அறிந்துகொண்டு வர வசதியாக கண்டுணர்வு சுற்றுலா நார்த்தாமலை பெஸ்ட் தொண்டு நிறுவனம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. உழவர் மன்ற அமைப்பாளர்களை குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் ராஜசேகரன் இக்கண்டுணர்வு சுற்றுலாவிற்கு அமைப்பாளர்களை அழைத்துச் சென்று வந்தார். புதுச்சேரியின்

மதகடிப்பட்டியில் அரசு மூலிகைப் பண்ணை யில் அமைக்கப்பட்டுள்ள மூலிகைக் கண்காட்சியினையும், மூலிகைகளின் முக்கியத்துவம் மற்றும் மருத்துவப் பயன்கள் குறித்தும் புதுச்சேரி தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் விளக்கி கூறினர். புதுச்சேரி ஆரோவில் அரவிந்தர் ஆசிரமம் மூலம் அமைக்கப்பட்டுள்ள ஆரண்யா அங்ககப் பண்ணை உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு காண்பிக்கப்பட்டது. இப்பண்ணையில் அங்கக இயற்கை விவசாயம் மூலம் பயிர் செய்யப்பட்டுள்ள காய்கறிப் பயிர்கள், மரப்பயிர்கள் மற்றும் இயற்கை உரங்கள் குறித்தும் அப்பண்ணை அலுவலர்களால் விவரமாக எடுத்துக் கூறப்பட்டது. மேலும் அப்பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள கால்நடை பண்ணை களையும் இயற்கையான வழியில் கால்நடைகள் பராமரிக்கப் பட்டு வருவதையும் ஒருங்கிணைந்த பண்ணை முறைகளையும் உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு காண்பிக்கப்பட்டது. அங்கக வேளாண்மை, மரங்கள் வளர்ப்பு, இயற்கை முறையில் பூச்சி நோய் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு நேரடியாக விளக்கிக் கூறப்பட்டது. பயிற்சியின் நிறைவில் புதுச்சேரியில் செயல்பட்டு வரும் ஆரோவில் பண்பாட்டு மையத்தின் செயல்பாடுகள் குறித்து நேரில் உழவர் மன்ற அமைப்பாளர்களுக்குக் காண்பிக்கப்பட்டது.

## வேதாரண்யம் பகுதியில் பூச்சி தாக்குதலுக்கு உள்ளான பயிர்களை நிபுணர் குழு ஆய்வுவிவசாயிகளுக்கு ஆலோசனை

வேதாரண்யம்,: வேதாரண்யம் தாலுகா பகுதிகளில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற் பயிர்களில் இலை சுருட்டு புழு தாக்கி உள்ளதாக கடந்த 3 ம் தேதி தினகரனில் செய்தி வெளியாகி இருந்தது. இதையடுத்து வேளாண்மை நிபுணர் குழுவினர் வயல்களை பார்வையிட்டு பூச்சிகளை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர். நாகை மாவட்டத்தில் தாளடி மற்றும் நேரடி விதைப்பு செய்யப்பட்ட நெற் பயிர்கள் தூர் கட்டும் பருவத்திலும் மற்றும் தீவிர தூர் கட்டும் பருவத் திலும் உள்ளது. கடந்த சில தினங்களாக நிலவும் வானிலையால்

கொள்ளிடம், சீர்காழி, செம்பனார்கோவில், கீழ்வேளூர் மற்றும் வேதாரண்யம் வட்டாரங்களில் நெற்பயிர்களில் இலைசுருட்டுப்புழு, ஆணைகொம்பன் ஈ தாக்குதலும் மற்றும் பாக்டீரியல் இலை கருகல் நோய், பாக்டீரியல் இலை கீரல் நோய் தாக்குதல் காணப்படுகிறது. இது குறித்து தினகரனில் கடந்த 3ம் தேதி படத்துடன் செய்தி வெளி யானது. இதையடுத்து நேற்று வேதாரண்யம் வட்டாரம் வாய்மேடு, தகட்டூர், பஞ்சநதிக்குளம் (மேற்கு, கிழக்கு) ஆயக்காரன்புலம் மற்றும் கருப்பம்புலம் ஆகிய கிராமங்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறித்த வயல் வெளி ஆய்வு வேளாண்மை இணை இயக்குநர் பன்னீர்செல்வம் தலைமையில் வேளாண்மை உதவி இயக்குநர், தாமோதரக்கண்ணன் மற்றும் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் டாக்டர். அழகர், மற்றும் டாக்டர் அனுராதா ஆகி யோர் கொண்ட நிபுணர் குழு பாதிக்கப்பட்ட பயிர்களை பார்வையிட்டனர். அப்போது பாதிக்கப்பட்ட பயிர்களில் பூச்சிகளை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர்.ஆய்வின் போது உதவி வேளாண்மை அலுவலர்கள் வேதரத்தினம், எழிலரசி, ஆறுமுகம் மற்றும் முன்னோடி விவசாயிகள் நடராஜன், கைலாசம், கண்ணன், முருகேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

## <u>எண்ணெய் வித்து பயிர் சாகுபடி பயிற்சி முகாம்</u>

நத்தம், : நத்தம் அருகே மணக்காட்டூரில் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி குறித்து 2 நாள் பயிற்சி முகாம் நடந்தது. மாவட்ட வேளாண்மை துணைஇயக்குநர் (மாநில திட்டம்) தங்கச்சாமி பயிற்சியினை தொடங்கி வைத்து பேசினார். அப்போது, வறட்சியை போக்குவதற்கும், சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு பாசனம் செய்வதற்கும், கிணறுகளில் நிலத்தடி நீர் உயர்வதற்கும் பண்ணை குட்டைகள் அமைக்க வேண்டும்; நிலக் கடலை யில் அதிக மகசூல் பெற ஜிப்சம் 15 நாள் இடைவெளியில் 2 தவணையாக இட்டு மண் அணைக்க வேண்டும்; மேலும் தென்னையில் நீர் பாசனத்திற்கு சொட்டு நீர் பாசனம் அமைப்பது பற்றியும் விரிவாக

எடுத்துரைத்தார். வேளாண்மை திட்டங்கள் குறித்து வேளாண் உதவி இயக்குநர் ரவிபாரதி விளக்கினார். மேலும் நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது குறித்த தொழில்நுட்பங்களை துணை வேளாண்மை அலு வலர் எலிசபத் ராணியும், தரமான எண்ணெய் வித்து பயிர் விதைகள் குறித்து உதவி விதை அலுவலர் பாலமுருகனும் எடுத்துரைத்தனர். மண் மாதிரி சேகரம் செய்தல், உயிர் உரத்துடன் விதை நேர்த்தி செயல் விளக்கங்களை உதவி வேளாண்மை அலுவலர்கள் பத்ரி நாராயணன், நாகராஜன், ஆகியோர் செய்முறை விளக்கத்துடன் பயிற்சியளித்தனர். முகாமிற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட பணியாளர்கள் ராஜாங்கம், ராஜா, குமரேசன் ஆகியோர் செய்திருந்தனர். இதில் குடகிப்பட்டி ஊராட்சி தலைவர் செல்லம் மற்றும் விவசாயிகள் 30 பேர் கலந்து கொண்டனர்.

## மாவுப் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் வேளாண்துறை ஆலோசனை

பழநி, : சிறு தானியங்களை தாக்கும் மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் அலுவலர்கள் ஆலோ சனை வழங்கி உள்ளனர். பழநி வட்டாரத்தில் நெல், கரும்பு, சிறு தானியங்கள், பருத்திப்பயிர்கள், தோட்டக்கலை பயிர்கள் பயிரிடப்பட்டு வருகிறது. இப்பயிர்களில் தற்போது மாவுப்பூச்சிகள் தென்படுகிறது. இப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கு வயலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கிரிப்டோளமஸ் பொறி வண்டுகளை ஏக்கருக்கு 600 எண்கள் வீதம் பயன்படுத்துதல், 5 சத வீதம் வேப்பங்கொட்டை கரைசலை ஒட் டும் திரவத்துடன் கலந்து பயன்படுத்த வேண்டும். மேலும், ரசாயன மருந்துகளாக புரபனோபஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி, இமிடா குளே பிரிட் 0.5 மில்லி, தயோ மீத்தாக்சான் ஒரு கிராம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தலாம். மருந்து தெளிக்கும் போது ஒட்டும் திரவத்தை பயன்டுத்த வேண்டும். மருந்தை சுழற்சி முறையில்

பயன்டுத்துவதே சிறந்தது. இம்முறையை விவசாயிகள் கடைபிடிக்கும் போது பயிர்களில் மாவுபூச்சிகளின் தாக்குதல் குறையு மென வேளாண் துறை அலுவலர்கள் கூறி உள்ள னர்.

## <u>கேரளாவில் பறவை காய்ச்சல் எதிரொலி மானாமதுரையில் வாத்து விற்பனை அமோகம்</u>

மானாமதுரை, : கேரளாவில் பறவைக்காய்ச்சல் எதிரொலியாக கோழி, வாத்துகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் தென்மாவட்டங்களில் வாத்து விற்பனை கனஜோராக நடந்துவருகிறது. கேரளாவில் பரவி வரும் பறவைக்காய்ச்சலால், அந்த மாநிலத்தில் உள்ள கோழி மற்றும் வாத்து பண்ணைகளில் இருந்து ஆயிரக்கணக்கான கோழி மற்றும் வாத்துக்கள் தீ வைத்து அழிக்கப்பட்டன. மேலும் வயல்வெளிகள், மனிதர்கள் வசிக்கும் பகுதிக்கு வரும் பறவைகள் தொடர்பாக கேரள சுகாதாரத்துறை மற்றும் வனத்துறையினர் தீவிர கண்காணித்து வருகின்றனர். தமிழகத்தில் பல்லடம், திருப்பூர், நாமக்கல், கோவை மாவட்டங்களில் இருந்து கேரளாவிற்கு அனுப்பப்படும் முட்டை, இறைச்சிக்கோழிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தமிழக-கேரள எல்லைப்பகுதியில் அமைந்துள்ள கோவை மாவட்டம் வாளையார், குமுளி உள்ளிட்ட சோதனைச் சாவடிகளில் தீவிர கண்காணிப்பு பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளனர். கேரளாவிற்கு கோழி மற்றும் வாத்துகள் அனுப்புவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், தேக்கமடைந்த வாத்துக்குஞ்சுகளை தென் மாவட்டங்களில் விற்கும் முயற்சியில் சேலத்தை சேர்ந்த வியாபாரிகள் ஈடுபட்டுள்ளனர். நேற்று மானாமதுரைக்கு வந்தவாத்து விற்பனை யாளர்கள், வாத்துக்குஞ்சுகளை முக்கிய தெருக்களின் வழியே கூவிக்கூவி விற்பனை செய்தனர். ஒரு ஜோடி வாத்துக்குஞ்சுகள் ரூபாய் 100க்கு விற்பனை செய்யப்பட்டது. கோழி வளர்ப்பை போன்றே வாத்து வளர்ப்பும் செலவில்லாதது என்பதால் பொதுமக்களும் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். ஆனால் விற்பனை செய்யப்படும் வாத்துகளுக்கு பறவைக்காய்ச்சல் பாதிப்பு உள்ளதா? என்பது தெரியாததால் விபரம்

அறிந்தவர்கள் இதனை வாங்கவில்லை. இது குறித்து வாத்து வியாபாரிகள் பெத்துராஜ், சின்னு ஆகியோர் கூறுகையில், ஆந்திர மாநிலம் சித்தூர், கர்நூல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் வாத்துக்குஞ்சு பொறிப்பகங்கள் உள்ளன. அங்கிருந்து மொத்த விற்பனைக்காக வாத்துக்குஞ்சுகளை வாங்கி கேரளாவில் விற்பது வழக்கம். வாத்து நீர்நிலைகளிலும், வயல்களின் அருகில் உள்ள சேறுகளில் உள்ள புழு, பூச்சிகளை உண்டு வாழும். கேரளாவில் நீர்ப்பரப்பு அதிகம் என்பதாலும், அங்கு வாத்து முட்டையில் ஆம்லெட்டுக்கு வரவேற்பு உள்ளதாலும், வாத்து இறைச்சி கேரளத்தில் விரும்பி உண்ணும் உணவுவகை என்பதாலும் அங்குள்ளவர்கள் வாத்து குஞ்சுகளை அதிகம் வாங்கி வளர்ப்பார்கள். தற்போது அங்கு பறவைக்காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் வாத்து விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே ஆந்திராவில் வாங்கிய குஞ்சுகளை தென்மாவட்டங்களில் விற்பனை செய்து வருகிறோம் என்றனர்.

தினத்தந்தி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விலையில்லா ஆடு, மாடுகள் பெறும் பயனாளிகள் நல்ல முறையில் பராமரித்து வருமானத்தை பெருக்கி கொள்ள வேண்டும் மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் பேச்சு**



விலையில்லா ஆடு, மாடுகள் பெறும் பயனாளிகள் அதனை நல்ல முறையில் பராமரித்து வருமானத்தை பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் கூறினார்.

கிராமஅளவிலானகுழுகூட்டம்

கடலூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் விலையில்லா ஆடுகள், கறவை மாடுகள் வழங்கும் திட்டம் பற்றி கிராம அளவிலான குழு கூட்டம் கடலூர் டவுன்ஹாலில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் தலைமை தாங்கி பேசினார். அப்போதுஅவர்கூறியதாவது:–

பெண்களுக்குமுன்னுரிமை

தமிழக அரசு கிராமப்புறங்களில் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் விலையில்லா வெள்ளாடு, செம்மறி ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. ஏழை, எளிய, ஆதிதிராவிட சமுதாய மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து ஊரக பகுதிகளில் வேலைவாய்ப்பை உருவாக்கும் உன்னதமான திட்டம். கடலூர் மாவட்டத்தில் இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த ஒத்துழைப்பு நல்கி வரும் அனைவருக்கும் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த திட்டத்தில் என்னென்ன மாவட்ட நிர்வாகம் உதவ வேண்டும். என்னென்ன விவரங்கள் தெரிய வேண்டும் என்பதை இப்போதே கேட்டு தெளிவு பெற்றுக்கொள்ளுங்கள். ஒரு ஊராட்சியில் 100 குடும்பங்கள் இருந்தால், அவர்கள் அனைவருக்கும் விலையில்லா ஆடு, மாடுகளை வழங்க முடியாது. அவர்களில் யாருக்கு முன்னுரிமை கொடுத்து பயனாளிகளை தேர்வு செய்ய வேண்டும் என்பதை நீங்கள் புரிந்து, அதற்கேற்ப பயனாளிகளை தேர்வு செய்ய வேண்டும். வருமானத்தை பெருக்க வேண்டும். ஆடு, மாடுகள் பெறும் பயனாளிகள் அதனை நல்ல முறையில் பராமரித்து வருமானத்தை பெருக்கிக்கொள்ள வேண்டும். 4 ஆடுகள் வாங்கும் நீங்கள் அதனை 16, 32 ஆடுகளாக பெருக்கி பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைய வேண்டும். அப்போது தான் இந்த திட்டம் முழுமையாக வெற்றி பெறும். இவ்வாறு கலெக்டர் சுரேஷ்குமார் பேசினார். தொடர்ந்து கூட்டத்தில்

பங்கேற்ற சேதுவராயன்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் திராவிடமணி, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் இருந்து மாடுகள் வாங்க வேண்டும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். அந்த மாடுகள் நமது கிராமங்களில் உள்ள சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப வளருவதில் சிக்கல் உள்ளது. ஆகவே நமது மாநிலத்திற்குள்ளேயே மாடுகளை வாங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கலெக்டரிடம் கூறினார். இதை கேட்ட கலெக்டர் இது பற்றி அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். 6 ஆயிரத்து 849 பேருக்கு ஆடுகள் வழங்க திட்டம் கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் சுகுமாறன் வரவேற்றார். துணை இயக்குனர் சுகுமார், ஒன்றியக்குழு தலைவி மணிமேகலை பழனிச்சாமி, உதவி இயக்குனர்கள் (சிதம்பரம்) சதாசிவம், தட்சிணாமூர்த்தி (விருத்தாசலம்), கணேசன் (கடலூர்), ஆவின் துணை பதிவாளர் பாலசுந்தரம், உதவி பொது மேலாளர் மாரிகனி, பொன்னம்பலம், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், சுயஉதவிக்குழு ஊக்குனர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கால்நடை உதவி மருத்துவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இது பற்றி கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் சுகுமாறன் கூறுகையில், கடலூர் மாவட்டத்தில் இது வரை 13 ஒன்றியங்களை சேர்ந்த 60 கிராமங்களில் ஒரு கிராமத்துக்கு 50 மாடுகள் வீதம் 3 ஆயிரம் மாடுகள் வழங்கப்பட்டுள்ளது. 433 கிராமங்களில் 19 ஆயிரத்து 594 பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் 13 ஒன்றியங்களில் 6 ஆயிரத்து 849 பயனாளிகளுக்கு ஆடுகளும், 300 பேருக்கு மாடுகளுக்கும் வழங்குவதற்கான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பிப்ரவரி மாதத்துக்குள் விலையில்லா ஆடு, மாடுகள் வழங்கப்பட்டு விடும் என்றார்.

## கல்லல் பகுதியில் பயிர்களை தாக்கிய நோய்கள் குறித்து வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு



காரைக்குடி, கல்லல் பகுதியில் பயி ரிடப்பட்ட நெல் மணிகள் சரியான பருவத்தை அடைய வில்லை என விவசாயிகள் அளித்த மனுவின் பேரில் வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு பணியில் ஈடுபட் டனர்.

ஆய்வு

சிவகங்கை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த தொடர் மழையை தொடர்ந்து விவசாய பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கல்லல் வட்டார பகுதியில் தற்போது 4ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் சாகு படி செய்யப்பட்டுள்ளது. இந்த பயிர் ரகங்களில் ஆடுதுறை 45 ரகத்தில் நெல் மணிகள் முழுமையாக பால் பிடிக்கும் பருவத்தை அடைய வில்லை என பல்வேறு கிரா மத்தில் இருந்து விவசாயிகள் மனு அளித்துள்ளனர். இதனைத்தொடர்ந்து கல்லல் வட்டார வேளாண்மை துறை உதவி இயக்குனர் மற்றும் செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலைய பேராசி ரியர் சுவாமிநாதன் ஆகியோர் தலைமை யிலான விஞ்ஞா னிகள் குழுவினர் இதற்கான காரணங்களை பல்வேறு இடங்களில் ஆய்வு செய்தனர். அதன்பேரில் ஆய்வுகளின் முடிவில் நெல் பருவம் பூக்கும் நேரத்தில் தொடர்ந்து மழை பெய்ததாலும், 15 நாட் களுக்கு மேல் சராசரியான வெப்ப நிலை இல்லாததாலும், இலைச் சுருட்டுப்புழு, தண்டுத் துளைப்பான், கதிர் நாவாய் பூச்சிகளின் தாக்குதல், குலை நோய்களின் தாக்குதல் ஆகிய காரணங்களால் சரியான விளைச்சல் இல்லாமல் போனது கண்டுபிடிக்கப் பட்டது.

கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

இந்த காரணிகளையும், நோய் தாக்கும் புழுக்களையும் கட்டுப்படுத்த அவர்கள் விவ சாயிகளுக்கு தெரிவித்துள்ள சில வழி முறைகள் வரு மாறு:– குலைநோயினை கட்டுப் படுத்த ஏக்கருக்கு கார்பென் டாசீம் 200

அல்லது டிரை சைக்ளசோல் 120 கிராமினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை வேளைகளில் தெளிக்கலாம். இலைச்சுருட்டுபுழு, தண்டுத் துளைப்பானை கட்டுப்படுத்த ஏக்கருக்கு புரொபனோபாஸ் 400 மிலலி லிட்டரினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். கதிர்நாவாய் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த வசம்பு தூள் 10 கிலோவை காலை 8 மணிக்கு மேல் பனிப் பதத்தில் தூவலாம். மேலும் மகசூல் இழப்பினை தவிர்த்து அதிக மகசூல் பெற் றிட யூரியா 2 கிலோ, பொட் டாஷ் 2 கிலோ, மற்றும் டிஏபி 4 கிலோவை முதல் நாள் 10 லிட்டர் தண்ணீரில் ஊர வைத்து மறுநாள் அதனை வடிகட்டி அதனுடன் யூரியா , பொட்டாஷ், ஆகிய வற்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் நல்ல மகசூல் பெறலாம். மேலும் காலை 6 மணி முதல் 8 மணி வரை மகரந்த சேர்க்கை நடைபெறு வதற்காக பூக்கள் திறந்து இருக்கும் அந்தநேரத்தில் விவசாயிகள் எந்த மருந்தும், உரங்களும் இடுவதை தவிர்க்க வேண்டும். இந்த தகவலை கல்லல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கணேசன் தெரிவித்துள்ளார்.

## திருச்சி மாநகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால்- கட்டிடங்கள் கட்டும் பணி மேயர் ஜெயா ஆய்வு செய்தார்



திருச்சி மாநகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால்-கட்டிடங்கள் கட்டுமான பணிகளை மேயர் ஜெயா ஆய்வு செய்தார். கவுன்சிலர் அலுவலகம் திருச்சி மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் கட்டிடங்கள் கட்டுமான பணிகளை மேயர் ஜெயா ஆய்வு செய்தார். கருமண்டபம் பகுதியில் இருந்து இந்த ஆய்வு பணி தொடங்கியது. கருமண்டபம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் 45-வது வார்டு கவுன்சிலர் அலுவலகம் ரூ.6 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில்

கட்டப்பட்டு வருகிறது. இதனை ஆய்வு செய்த மேயர் ஜெயா பின்னர் 40-வது வார்டு விசுவாச நகர், சோழகர் தெருவில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் கட்டுமான பணியை பார்வையிட்டார்.

குறும்பாலங்கள்

இதனை தொடர்ந்து 51-வது வார்டில் நடைபெற்று வரும் குறும்பாலங்கள் கட்டுமான பணியையும் அவர் பார்வையிட்டார். தென்னூர் அண்ணா நகர் சாஸ்திரி சாலை இணைப்பு சாலை பணி இறுதிக்கட்டத்தை எட்டி உள்ளது.அதனை பார்வையிட்ட மேயர் ஜெயா பணிகளை விரைவாக முடித்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரும்படி அதிகாரி களிடம் கேட்டுக்கொண்டார். தென்னூர் அண்ணாநகர் இரட்டை வாய்க்காலை தூர்வாருவதற்கு ஆவன செய்யப்படும் என தெரிவித்தார்.

சமுதாயகூடம்

இதையடுத்து 55-வது வார்டு செவந்தி பிள்ளையார் கோவில் தெருவில் நடை பெற்று வரும் சாலைப்பணிகள், மழைநீர் வடிகால் கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார்.அதன் பின்னர் திருச்சி 60-வது வார்டு உறையூர் பாண்டமங்கலத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து கட்டப்பட்டு வரும் சமுதாய கூடத்தை பார்வையிட்டார். இந்த ஆய்வின்போது நகர பொறியாளர் சந்திரன், கோட்ட தலைவர் ஞானசேகர், செயற்பொறியாளர் நாகேஷ், உதவி ஆணையர் தயாநிதி, உதவி செயற்பொறியாளர் கண்ணன், கவுன்சிலர்கள் முத்துச்செல்வம், கல்பனா கிட்டு, என்.எஸ். பூபதி, சண்முகம், ராஜா உள்பட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

## கோழிப்பண்ணைகளில் கலெக்டர் சம்பத் ஆய்வு



மரக்காணம் அருகே கோழிப்பண்ணைகளில் கலெக்டர் சம்பத் ஆய்வு மேற்கொண்டார்.கலெக்டர்ஆய்வு

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 914 கோழிப்பண்ணைகளிலும், பறவை காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? என்று கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் தினமும் கோழிப்பண்ணைகள் மற்றும் வாத்து பண்ணைகளை நேரில் கண்காணிக்க வேண்டும் என்று மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டார். அதன்படி மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வன்னிப்பேர் ஊராட்சியை சேர்ந்த டி.புதுக்குப்பம் கிராமத்தில் அரசு மானியத்துடன் செயல்பட்டு வரும் கோழிப்பண்ணைகளில் நேற்று கலெக்டர் சம்பத் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அறிவுரை அப்போது கேரள மாநிலத்தில் உள்ள பறவை காய்ச்சல் விழுப்புரம் மாவட்டத்தில் வராமல் தடுக்க கோழிப்பண்ணைகளின் உயிர் பாதுகாப்பு முறைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தபடுகிறதா? என்றும், பண்ணையாளர்கள் கோழிப்பண்ணைகளை சுத்தமாகவும், சுகாதாரமாக வும் பராமரிக்க வேண்டுமெனவும் அவர் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குனர் டாக்டர் மகேந்திரன், திண்டிவனம் கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் மோகன் ஆகியோர் உடனிருந்தனர்.